

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் முன்னிலையில் நேற்று (9.12.2024) தலைமைச் செயலகத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவையொட்டி பேரவைத் தலைவர் அவர்களைத் தலைவராகக் கொண்ட குழுவால் தயாரிக்கப்பட்ட "சட்டமன்ற நாயகர்கலைஞர்" நூற்றாண்டு விழா சிறப்பு மலரை வெளியிட நீர்வளத்துறை அமைச்சரும், அவை முன்னவருமான துரைமுருகன் அவர்கள் பெற்றுக்கொண்டார். இந்த நிகழ்ச்சியில், அமைச்சர் பி.கே.சேகர்பாபு, உயர் கல்வித் துறை அமைச்சரும், விழாக் குழு இணைத் தலைவருமான முனைவர் கோவி. செழியன், சட்டமன்றப் பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, அரசு தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர் தொல். திருமாவளவன், சட்டமன்ற உறுப்பினர் கு.செல்வப்பெருந்தகை, விழாக் குழு உறுப்பினர்கள், பேரவை முன்னாள் தலைவர் ஆர்.ஆவுடையப்பன், மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் முன்னாள் தலைவர் மற்றும் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் எஸ். பீட்டர் அல்போன்ஸ், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் சி.ஞானசேகரன், பேரவை முன்னாள் செயலாளர் மா.செல்வராஜ், சட்டமன்றக் கட்சித் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள், சட்டப்பேரவை முதன்மைச் செயலாளர் முனைவர் கி. சீனிவாசன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு முன்னிலையில் நேற்று (9.12.2024) தலைமைச் செயலகத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவையொட்டி, "நூற்றாண்டு விழா நாயகர் கலைஞர் சட்டமன்றத்தின் மூலம் சமூக முன்னேற்றத்திற்கு ஆற்றிய சாதனைகளில் மாணவர்களை ஈர்த்தது" என்ற தலைப்பில் மாநில அளவில் நடைபெற்ற கருத்தரங்கில் முத்தமிழறிஞர் கலைஞர் குறித்து சிறப்பான கருத்துகளை எடுத்துரைத்ததற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட 3 பள்ளி மற்றும் 3 கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு பரிசுத் தொகைக்கான வங்கி வரைவோலைகளையும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச்சிலைகளையும் வழங்கி வாழ்த்து தெரிவித்தார். இந்த நிகழ்ச்சியில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், அமைச்சர்கள் பி.கே. சேகர்பாபு, முனைவர் கோவி. செழியன், சட்டமன்றப் பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, அரசு தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன், தொல். திருமாவளவன் எம்.பி., கு.செல்வப்பெருந்தகை எம்.எல்.ஏ. , விழாக் குழு உறுப்பினர்கள், பேரவை முன்னாள் தலைவர் ஆர்.ஆவுடையப்பன், எஸ்.பீட்டர் அல்போன்ஸ், முன்னாள் எம்.எல்.ஏ.சி.ஞானசேகரன், பேரவை முன்னாள் செயலாளர் மா. செல்வராஜ், சட்டமன்றக் கட்சித் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள், சட்டப்பேரவை முதன்மைச் செயலாளர் முனைவர் கி.சீனிவாசன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### டி.ஆர்.பாலு எம்.பி. – அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை – ஜெ.பி.ஆர்.ரகு தலைமை!

# சென்னை கிழக்கு மாவட்ட இளைஞரணி சார்பில் மாபெரும் புகழரங்கம்!

## பீட்டர் அல்போன்ஸ் – சதன் திருமலைகுமார் – சிந்தனைச் செல்வன் சிறப்புரை!

சென்னை, டிச. 10 -

சென்னைகிழக்குமாவட்ட இளைஞர் அணி சார்பில் மனிதநேயஉதயநாளைமுன்னிட்டு - மாபெரும் புகழரங்கம் அகில இந்திய காங்கிரஸ் மூத்த தலைவர் பீட்டர் அல்போன்ஸ், மதிமுகசட்டமன்றதலைவர் சதன் திருமலைகுமார்எம்.எல்.ஏ,சிந்தனைசெல்வன்எம்.எல்.ஏ,ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

சென்னைகிழக்குமாவட்ட திமுக இளைஞர் அணி சார்பில் மனிதநேய உதயநாளை முன்னிட்டு உதயம்20, இனம் காக்க அணியாவோம்! மொழி காக்க களம் காண்போம்! எனும் தலைப்பில்மாபெரும்புகழரங்கம் நாளை (11.12.2024 புதன்கிழமை) மாலை 06.00 மணியளவில், சென்னை, மேனாம்பேடு ரோடு, அம்பத்தூர் தொழில் பேட்டையில் நடைபெறுகிறது.

இந்நலத்திட்ட விழாவில், பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர் ரகு தலைமை வகிக்கிறார். கழகப் பொருளாளர் - கழக நாடாளுமன்றக்குழுத்தலைவர் டி.ஆர்.பாலு எம்.பி, மாவட்டக்கழக செயலாளரும், அமைச்சர் பி.கே.சேகர்பாபு, ஜோசப்சாமுவேல் எம்.எல்.ஏ, பி.கே.மூர்த்தி எம்.சி, எம்.டி.ஆர்.நாகராஜ், டி.எஸ். பி.இராஜகோபால் எம்.சி, டி.லோகேஷ், எல்.பி.எப். மோகன்,வி.ரமேஷ்(எ)நீலகண்டன் எம்.சி, ஜெ.பாலமுருகன் எம்.சி,டாக்டர்.ஏ.பி.பூர்ணிமா எம்.சி,டாக்டர்.ஜி.சாந்தகமார் எம்.சி, கு.கிருஷ்ணமூர்த்தி, து.ஆயிரம், ஜி.வி.நாகவள்ளி முன்னிலை வகிக்கின்றனர். எஸ்.தனசேகர், ஜி.ஜெ.பிரபு, பா.ஜெகதீஷ்,க.வினோத்,ஆர். டி.சங்கர்நானா, தி.ஜெயபால், என்.பி.எம்.வசந்த், இரவைபிரவு, ஆர்.கலாநிதி, கு.கார்த்திக், லோ.திருநாவுக்கரசு, பிரசாந்த் ஆகியோர் வரவேற்கின்றனர்.

இம்மாபெரும் புகழரங்கத்தில் அகில இந்திய காங்கிரஸ் மூத்த தலைவர் பீட்டர் அல்போன்ஸ், மதிமுக சட்டமன்ற தலைவர்சதன்திருமலைகுமார் எம்.எல்.ஏ, சிந்தனை செல்வன் எம்.எல்.ஏ, ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

மேலும், இந்நலத்திட்ட விழாவில், சென்னை மாநகர மேயர் ஆர். பிரியாராஜன், ப.தாயகம்கவி எம்.எல்.ஏ, அ.வெற்றிஅழகன் எம்.எல்.எ, பி.முனியாண்டி. மாநிலநிர்வாகிகள்: ப.ரங்கநாதன் கே.எஸ். இரவிச்சந்திரன் , கே.சந்துரு, சி.மகேஷ்குமா, சங்கிரிநாராயணன்,தமிழன்பிரசன்னா,மணிமுடி, வே.உமாகாந்தி, கே.எஸ். எம்.நாதன், எம்.விஜயகுமார், என்.பி.எம்.ஷேக்அப்துல்லா, பரிதிஇளம்சுருதி எம்.சி, ஆர். வரதன், வழக்கறிஞர் இந்திரஜித். மாவட் கழக நிர்வாகிகள்: கோ.ஏகப்பன், தேவஜவகர், ஜி.மகாதேவன்,

புனிதவதி எத்திராசன் எம்.சி, இசட்ஆசாத் எம்.சி, கூபி. ஜெயின்எம்.சி, ஸ்ரீராமுலு எம்.சி, சரிதாமகேஷ்குமார் எம்.சி. பகுதி கழக செயலாளர்கள்: வே.வாசு, ஐ.சி. எப்.வ.முரளிதரன், எ.நாகராசன் எம்.சி, சொ.வேலு எம்.சி, வி.சுதாகர், எம்.சாமிகண்ணு, செ.தமிழ்வேந்தன்,எஸ்.இராஜசேகர்,எஸ்.முரளி.பொதுக்குழு உறுப்பினர்கள்: கோ.மணி, எஸ்.பன்னீர்செல்வம், டி.வி. செம்மொழி எம்.சி, பி.ஜே.துளசிங்கம், பி.உதயசங்கர், சாவித்திரிவீரராகன், எம்.இப்ராஹிம் கனி, அ.நிர்மலாதேவி, இரா. கலைச்செல்வி. மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள்: வானவில்விஜய், நா. துலக்காணம், ஜி.தாமோதரன், துரை கண்ணன், சுதாதீனதயாளன் எம்.சி, ராஜேஸ்வரிஸ்ரீதர் எம்.சி, பி.விஜயகுமார், எம். பெரோஸ்கான், எம்.விநாயகம், ஆர்.எஸ்.சித்திக், க.பா.பிரதீப்குமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், கா.ராஜ்முகமது,இரா.வீரமணி.அம்பத்தூர் தொகுதி மாமன்ற உறுப்பினர்கள்: உஷா நாகராஜ் எம்.சி, எம்.இ.சேகர் எம்.சி, எஸ்.உமா எம்.சி,

கே.பொற்கொடி எம்.சி, எம்.கமல் எம்.சி. அம்பத்தூர் கிழக்கு வடக்கு தெற்கு பகுதி வட்ட கழக செயலாளர்கள்: மு.விஜயகுமார், மு.சண்முகம், ஆ.சுந்தர்ஜ், சீ.லோகநாதன், சு.மோகன்குமார், வி.ரவீந்திரன்,பு.வீரா(எ)வீரராகவன்,வெ.இராதாகிருஷ்ணன், த.கண்ணபிரான்,த.பிரகாஷ்குமார், சி.சீனிவாசன், நா.நெப்போலியன், இரா.டீக்கா ஆகியோர் சிறப்பிக்கின்றனர்.வட்டகழக செயலாளர் தி.வ.லால் நன்றி கூறுகிறார்.



நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் நேற்று (9.12.2024) சட்டமன்றப் பேரவையில், மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், நாயக்கர்பட்டி கிராமத்தில் இந்துஸ்தான் ஜிங்க் லிமிடெட் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட டங்ஸ்டன் கனிமச் சுரங்கம் அமைப்பதற்கான உரிமத்தை உடனடியாக இரத்து செய்திடவும், மாநில அரசுகளின் அனுமதியின்றி எந்தச் சுரங்க உரிமத்தையும் வழங்கக் கூடாது என்றும், ஒன்றிய அரசை வலியுறுத்தி அரசினர் தனித் தீர்மானத்தை முன்மொழிந்து உரையாற்றினார்.

### சென்னை வர்வதேச திரைப்பட விழாவிற்கு

# தமிழ்நாடு அரசின் சார்பில் - ரூ.85 லட்சம் நிதியுதவி!

## தமிழ் வளர்ச்சி – செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வழங்கினார்

சென்னை, டிச. 10 -

முதல்வர் அவர்களின் ஆணையின்படி,தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேற்ற (09.12.2024)தலைமைச்செயலகத்தில் 12.12.2024 முதல் 19.12.2024வரைசென்னையில் நடைபெறும் 22வது சென்னை சர்வதேசத் திரைப்பட விழாவிற்கு தமிழ்நாடு அரசின் சார்பில்ரூபாய்85இலட்சத்திற்கான காசோலையினை வழங்கினார்கள்.

தமிழ்நாடு அரசின்சார்பில், ஆண்டுதோறும்சென்னைசர்வதேசத் திரைப்பட விழாவிற்கு ரூபாய் 75 இலட்சம் நிதயுதவி வழங்கப்பட்டுவந்தநிலையில், முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 2023 ஆம் ஆண்டு ரூபாய் 85 இலட்சமாக உயர்த்தி வழங்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி இந்த ஆண்டும் 12.12.2024 முதல் 19.12.2024 வரை சென்னையில் நடைபெறும் 22வது சென்னை சர்வதேசத்திரைப்படவிழாவிற்குதமிழ்நாடு அரசின்சார்பில்ரூபாய்85 இலட்சத்திற்கான காசோலையினை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அவர்கள் நேற்று (09.12.2024) இந்திய திரைப்படத் திறனாய்வுக் கழகத்தின்பொதுச்செயலாளரும், சென்னை சர்வதேசத் திரைப்பட விழா இயக்குநருமான ஏ.வி.எம்.சண்முகத்திடம்வழங்கினார்.

இந்நிகழ்வின்போது, தமிழ்வளர்ச்சிமற்றும்செய்தித் துறைசெயலாளர்வே.ராஜாராமன், இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத் துறையின் கூடுதல் இயக்குநர் (மக்கள் தொடர்பு) மு.பா.அன்புச்சோழன்,கூடுதல் இயக்குநர் (செய்தி) எஸ்.செல்வராஜ், இந்திய திரைப்பட திறனாய்வுக் கழகத்தின் தலைவர் சிவன் கண்ணன் மற்றும் துணைத் தலைவர் ஆனந்த் ரங்கசாமி ஆகியோர் கலந்து கொண்டனர்.

